## களுத்துறை பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

---------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 723,299 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் ரூபா 586,787 ஆக கணக்குகளுக்குச் சீராக்கப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 136,512 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைத் தீர்மானத்தின் படி, மீளாய்வாண்டின் போது விலக்களிக்கப்பட்டிருந்த வீத வரி, வியாபார அனுமதிப்பத்திரம், கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி முறையே ரூபா 6,435, ரூபா 26,600, ரூபா19,780 மற்றும் ரூபா 27,040 தொகை குறித்த நிலுவை வருமானக் கணக்குகளில் மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் எனது அறிக்கையின் 2.2.1 (ஆ) ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டிருந்த செலவின விடயத்திற்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 160,912 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போது சீராக்கப்படுகையில் கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட்டு தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் திரண்ட நிதியக் கணக்கு மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் இறுதியில் செயற்திட்டத்திற்காகக் கிடைக்கப்பெற வேண்டிய மீதி ரூபா 20,807,718 தொகையான போதிலும் இதற்காக ரூபா 21,692,325 தொகையும், மீளாய்வாண்டிற்குரித்தான செயற்திட்டத்திற்காக ரூபா 7,028,289 தொகையும் கிடைக்கப்பெற்றிருந்தன. இதன் படி, முன்னைய ஆண்டின் குறை ஏற்பாடு ரூபா 884,607 தொகையான போதிலும் இதற்குப் பதிலாக ரூபா 3,654,321 கைத்தொழில் கடன்பட்டோர் கணக்கிற்கும் திரண்ட நிதிக் கணக்கிற்கும் சீராக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில்

கடன்பட்டோர் கணக்கு மீதி ரூபா 28,986,704 ஆக வேண்டிய போதிலும் ரூபா 31,756,418 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் இறுதியில் கைத்தொழில் கடன் கொடுத்தோருக்காக செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 23,027,435 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 21,723,050 தொகையும் மீளாய்வாண்டின் செயற்திட்டத்திற்காக ரூபா 7,028,289 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளுக்குரித்தான கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதி மேலும் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டுகளின் போது கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,304,385 கணக்குகளிலிருந்து பதிவளிக்கப்பட வேண்டிய போதிலும் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ரூபா 1,465,361 மேலும் செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் கைத்தொழில் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதியும் திரண்ட நிதிக் கணக்கு மீதியும் ரூபா 2,769,746 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் ரூபா 31,756,418 தொகையான வரவு மற்றும் செலவு மீதி ஒன்றுடனொன்று எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2009 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்ட ஏனைய வருமானக் கணக்கிற்கு தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 11,493,857 தொகையான மீதி கைத்தொழில் கடன்பட்டோர் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெறவேண்டிய சம்பள மீளளிப்புக் கூட்டுத்தொகையான ரூபா 3,598,755 தொகையும் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெறவேண்டிய அங்கத்துவப் படிப்பணக் கூட்டுத்தொகையான ரூபா 437,350 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிலுவையான வருமானக் கணக்கு மீதி ரூபா 15,529,963 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்கப் பெறவேண்டிய சம்பள மீளளிப்பு மற்றும் கிடைக்கப்பெறவேண்டிய அங்கத்துவப் படிப்பணம் முறையே ரூபா 1,612,204 தொகையும் ரூபா 349,500 தொகையுமான போதிலும் முறையே ரூபா 2,081,066 தொகையும் ரூபா 560,350 தொகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் வருமானமும் நிலுவையான ஏனைய வருமான மீதியான ரூபா 679,712 தொகையும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) திரண்ட பெறுவனவுப் பொழிப்பு (பி.ச 16) இன் படி, மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 111,667 தொகையான போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு ரூபா 76,267 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 35,400 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த வட்டி வருமானம் (1/61) ரூபா 70,647 வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மாதாந்தப் பெறுவனவு நாட்குறிப்பின் படி, 2013 திசெம்பர் மாதம் கிடைக்கப்பெற்றிருந்த வாடகை வருமானம் (5/25) ரூபா 27,600 தொகையும் விசேட வரி (6/16) ரூபா 3,750 தொகையும் பொழிப்பு வருமானப் பதிவேட்டில் பதியப்பட்டிராமையால் வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) முன்னைய ஆண்டின் இறுதி மீதி, மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக பிரதான பேரேட்டிற்குக் கொண்டுவரப்படுகையிலும் ஊழியர் பிணை வட்டி, வீதவரி

முற்பெறுவனவுக் கணக்கீடு மற்றும் சொத்துக் கொள்வனவு மூலதனமாக்கப்படல், பிரதான பேரேட்டிற்குக் கணக்கீடு செய்யப்படுகையில் நாட்குறிப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட ரூபா 230,392 தொகையான செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரை வரி மீதி, மீளாய்வாண்டின் ஐந்தொகையில் முன்னைய ஆண்டிற்குரித்தான மீதி நிரலில் ரூபா 62,854 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 43,984,448 கூட்டுத்தொகையான 5 மீதிகள் அதே நிரலில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 58,740,779 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,786,395 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,553,232 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 3,016 | 2,915 | 3,487 |
| (ii) | வாடகை | 2,236 | 2,259 | -- |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 162 | 72 | 137 |

**2.2.2 வீதவரி**

மீளாய்வாண்டிற்கான வீதவரி பட்டியலிடப்பட்ட மீதி ரூபா 2,033,652 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 3,033,989 ஆகக் காணப்பட்டது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டின் பட்டியலிடலில் ரூபா 1,275,842 தொகையும் நிலுவை மீதியில் ரூபா 631,711 தொகையும் அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை வருமான அறவீடுகள் 21 சதவீதமான குறைவான அளவைக் கொண்டிருந்தது.

**2.2.3 ஏக்கர் வரி**

2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 34,598 தொகையான நிலுவையான ஏக்கர் வரி மீதி நிலவியதுடன் மீளாய்வாண்டின் போது பட்டியல்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 3,094 ஆகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,398 ஆக அதாவது 6.4% ஆகக் காணப்பட்டமையால் சபையின் ஏக்கர் வரி அறவீடு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

**2.2.4 வியாபார நிலைய வாடகை**

2013 ஆம் ஆண்டின் வியாபார நிலைய வாடகையான ரூபா 162,000 தொகை பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 42,625 அதாவது 26 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 44,631,414 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 14,333,752 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 53-4618 ஆம் இலக்க டபிள் கப் வண்டி விபத்திற்குள்ளானமை**

சபைக்குரித்தான 53-4618 ஆம் இலக்க டபிள் கப் வண்டி 2013 மே 13 ஆம் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 102,104 இன் ஏற்பாடுகளின் படி, நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2013 செப்தெம்பர் 04 ஆம் திகதிய உறுதிச்சீட்டு இல. 13 இன் மூலம் கப் வண்டி திருத்தப்படுவதற்காக ரூபா 85,200 தொகை சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் பொறுப்பு வாய்ந்ததரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயலாற்றல்**

(அ) முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படாது 2013 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தப்படுவதற்காக 53 செயற்திட்டங்களுக்காக ரூபா 27,754,465 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 24 ஆம் திகதி வரையிலும் இதில் 33 செயற்திட்டங்களே நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 16,296,000 ஆகக் காணப்பட்டது. இதன் படி, மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்களில் 41% அளவான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 8 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் தினத்தில் மதிப்பீட்டை மாத்திரம் தயாரித்திருந்ததுடன் அம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,471,000 தொகையானதுடன் ரூபா 2,757,465 தொகையான 8 செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் யூலை, ஒக்டோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த 4 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,230,000 ஆகக் காணப்பட்டன.

(ஆ) மகநெகும கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஏப்ரல் முதல் திசெம்பர் வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த 43 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 24 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) வாகன கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிர்வாகம்